**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.763/2019 பெயர் : வனிதா நாள் : 21.04.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் M.Com., படித்துள்ளேன். அதனால், எனக்கு வங்கியில் வரவு, செலவு எப்படி செய்வது என்ற விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால், சரிதான். எனது திருமணம் பெற்றோர்கள் பார்த்து வைத்த திருமணம் என்றால், சரிதான். என் முன்னால் கணவர் செந்தில்ராஜா B.Sc., MBA., படித்துள்ளார். திருமண சமயத்தில் எனது முன்னால் கணவர் Havels கம்பெனியில் விற்பனை பிரதிநிதியாக பணியாற்றி வந்தார். திருமணத்திற்கு பின்பு என் தந்தைக்கு சொந்தமான தோட்டத்தில் வேல்முருகன் பிரிக்ஸ் என்ற பெயரில் சாம்பல் செங்கற்கள் செய்யும் தொழிலை நானும், என் முன்னால் கணவரும் மற்றும் சில நபர்களுடன் சேர்ந்து செய்து வந்தோம். பிறகு மற்ற நபர்களை விலக்கி நானும், என் கணவரும் மட்டும் மேற்படி தொழிலை செய்து வந்தோம். அந்த தொழிலுக்காக என் தந்தையாரின் சொத்தை வங்கியில் அடமானம் வைத்து, அதை மீட்க முடியாததால், மேற்படி சொத்து ஏலத்திற்கு போகும் நிலையில் இருந்தது, தற்போது என் தந்தை மேற்படி கடன் தொகையை வங்கியில் செலுத்தி வருகிறார். மேற்படி தொழில் செய்வதற்கு முன்பாக எனது கணவர் வேல்முருகன் டிரேடர்ஸ் என்ற பெயரில் ஓரியண்டல் பேன் விற்கும் ஏஜென்சி எடுத்து, ஈரோட்டில் நடத்தி வந்தார் என்றால், சரிதான். இரண்டு தொழில்களையும் நான் பங்கெடுத்து நடத்தி வந்தேனா என்றால், இல்லை, என் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, நடத்தி வந்தார். 2018-க்கு முன்பு மேற்படி தொழில் ஆரம்பிக்கப்பட்டு,

நடத்தி வரப்பட்டது. 2018, ஜுன் மாதத்திற்கு பின்னிட்டு நானும், எனது கணவரும் பிரிந்து விட்டதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன், அதன்பிறகு தற்போது வரை என் பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். 2020-ம் வருடம் ஒரு திவ்யாநாகராஜ் என்பவரிடம் ரூ.13 லட்சம் கடன் வாங்கியது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். அது சம்மந்தமாக அனுப்பப்பட்ட அறிவிப்பு எனது மாமனார் முகவரிக்கு வந்தது என்றால், சரிதான், ஆனால் அது அந்த அறிவிப்பு Re-Direct செய்யப்பட்டு, நான் குடியிருந்து வந்த முகவரிக்கு வந்தது. அவ்வாறு வந்திருந்தால், Re-Direct என மேற்குறிப்பு செய்யப்பட்டு, முகவரியும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால், சரிதான். மேற்படி இரண்டு தொழிலையும் எப்போது நிறுத்தினீர்கள் என்றால், 2018-ல் நான் பிரிந்து வந்துவிட்டேன், 2-ம் பிரதிவாதி எப்போது அந்த தொழிலை நிறுத்தினார் என்று எனக்கு தெரியாது. என் முன்னால் கணவரின் தாத்தா முத்துசாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால், தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது, இ.ம.எண்.4/2019 தாக்கல் செய்யப்பட்டு, அதில் தாவா சொத்து சம்மந்தப்பட்ட மூலப்பத்திரங்களை தாக்கல் செய்ய கேட்டுக்கொண்டதன் பேரில், 1-ம் பிரதிவாதி சொத்திற்குண்டான அசல் மூலப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்துக்களை முத்துசாமி கவுண்டர் பல்வேறு கிரையப்பத்திரங்கள் மூலம் தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். மேற்படி சொத்துக்களைப் பொறுத்து முத்துசாமி கவுண்டரும், 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து 1999-ம் வருடம் ஒரு பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால், சரிதான். 1-ம் பிரதிவாதிக்கு எந்த அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல், முத்துசாமி

கவுண்டருக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். முத்துசாமி கவுண்டருக்கு பிரிந்த சொத்துக்களை தாவா சொத்துக்களில் காண்பிக்கவில்லை என்றால், சரியல்ல, காண்பித்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும், தாவாவில் சேர்த்துள்ளேனா என்றால், இல்லை, திருமணத்தின் போது அவரிடம் எந்த சொத்துக்கள் இருந்ததோ, அதைமட்டும் தாவாவில் சேர்த்துள்ளேன். திருமணத்திற்கு முன்பு என்னென்ன சொத்துக்களை விற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. யார், யாருக்கு விற்றார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிதுராஜித வகையில் உள்ள வார்த்தையின் அடிப்படையில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆனது 08.03.1999-ம் வருடம் முத்துசாமி கவுண்டருக்கும், அவரது மகனான 1-ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால், சரிதான்.

**4 முதல் 6 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுறிது.**